செ. வெ.எண்.561 நாள்:06.07.2010

<u>செய்திக்குறிப்பு</u>

<u>தமிழ்நாட்டில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் ஏழை எளியவர்கள் ரூ.5,000/- வரை சொத்து வாங்கினால் இலவச பத்திரப்பதிவு.</u>
<u>மாண்புமிகு சுற்றுலா (ம) பதிவுத்துறை அமைச்சர் அறிவிப்பு</u>

தமிழ்நாட்டில் சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினர், ஏழை எளியவர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய அடித்தட்டு மக்கள் அனைவரும் தங்களுக்கென ஒரு சிறிய சொத்துக்காவது உரிமையாளர்களாக இருக்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் முதல்வர் டாக்டர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு கடந்த 1998ம் ஆண்டு பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர், ஏழை , எளியோர்கள் வாங்கம் சொத்தின் மதிப்பு ரூ.3,000/- க்கு மிகாமல் இருக்குமானால், அத்தகைய ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் வசூலிக்காமல் இலவசமாக பத்திரப் பதிவு செய்து தரப்படும் என விதி விலக்கு அளித்து ஆணையிட்டிருந்தது. இச்சலுகையை பயன்படுத்தி இலட்சக்கணக்கான நிலமற்ற ஏழை எளியவர்கள், நலிந்த பிரிவினர் ஆகியோர் தங்களுக்கென்று ஒரு சிறிய அளவிலான வீட்டுமனை மற்றும் விவசாய நிலம் ஆகியவற்றை வாங்கி பயனடைந்தனர். தாங்கள் குடியிருப்பதற்கான சிறிய வீட்டினை உருவாக்கிகொண்டனர். இத்திட்டம் பொது மக்களிடையே பெரிய வரவேற்பினை பெற்றது. இதனால் சமூகத்தின் ஏராளமான அடித்தட்டு மக்கள் தங்கள் வாழ்க்கையின் ஒரே கனவான தங்களுக்கென்று ஒரு சொத்தினை சொந்தமாக்கிக்கொள்ளும் வாய்ப்பினை பெற்றனர்.

இதனைத்தொடர்ந்து இதே போன்று அம்மக்களுக்கு மீண்டும் ஒரு அரிய வாய்ப்பினை வழங்கும் நோக்கத்துடனும், தற்போத நிலங்களின் மதிப்பு உயர்ந்துள்ளதை கருத்தில்கொண்டும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆணைப்படி கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளியோர்கள், நலிந்த பிரிவினர், நிலமற்றோர் தங்களுக்கென ஒரு சொத்து வாங்குவதனை மேலும் தொடர்ந்ந் ஊக்குவிப்பதற்காக இதுவரை சொத்து மதிப்பு ரூ.3,000/- வரை இருந்தால், இலவச பத்திரப்பதிவு என்று நிர்ணயிக்கப்பட்டிருந்ததை உயர்த்தி, இனிமேல் சொத்து மதிப்பு ரூ.5,000/- வரை இருந்தால், பொதுமக்கள் வாங்கம் அத்தகைய சொத்துக்கள் குறித்த ஆவணங்களுக்கு இலவச பத்திரப்பதிவு செய்து தரப்படும் என சட்டப்பேரவையில் அறிவித்ததற்கேற்ப தமிழ்நாடு அரசு 05.07.2010 அன்று ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணைப்படி சொத்துக்கள் மீதான இலவசப் பதிவிற்கான உச்சவரம்பு இன்று 06.07.2010 முதல் ரூ.3,000/-த்திலிருந்து ரூ.5,000/- என உயர்த்தப்படுகிறது. இதனையடுத்து 06.07.2010 முதல் பொதுமக்கள் ரூ.5,000/- வரை மதிப்புள்ள சொத்துக்களை வாங்கும்பொழுது அதற்கான விற்பனைப் பத்திரங்களுக்கு தமிழகம் முழுவதும் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களில் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் எதுவும் வசூலிக்காமல் இலவசமாக பதிவு செய்துக்கொடுக்கப்படும் என்று மாண்புமிகு சுற்றுலா (ம) பதிவுத்துறை அமைச்சர் அவர்கள்தெரிவித்தார்கள்.

வெளியீடுஇயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை
தலைமைச் செயலகம், சென்னை-9